DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 583/2020** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : முத்துலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13 July 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் இல்லை. அதனால் நீதியின் நலன் கருதி எதிரி முன்பாக சாட்சியின் சாட்சியத்தை பதிவு செய்யப்படுகிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது பெரும்பத்தூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர் என் கணவர் ஆவார். என் கணவர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து என்னை சந்தேகம் பட்டு கையில் இருக்கும், பொருள்களை வைத்து என்னை அடித்து உதைப்பார். சுமார் 7 வருடத்திற்கு முன்பு புளியம்பட்டியில் உள்ள Export company–யில் டெய்லராக வேலை செய்து வந்தேன். ஒரு நாள் நான் வேலை முடித்துவிட்டு வேலையில் இருந்து திரும்பி வரும்போது, சுமார் 5.30 மணியளவில் அங்கு வந்த

ஆஜர் எதிரி என்னை பார்த்து தேவடியா ( சாட்சி சில வார்த்தைகள் தயக்கம் காட்டியதால் நீதியின் நலன்கருதி சாட்சியை நீதிமன்ற (In camera proceedings)அடிப்படையில் எதிரியின் முன்பாக சாட்சியம் மீண்டும் பதிவு செய்யப்படவுள்ளது) உனக்கு வீட்டில் என்ட படுத்தா பிடிக்காது கம்பெனிக்கு வந்த அங்க படுக்க வசதி கம்பெனினா சந்து போந்து இருக்குலா நீ யார்ட வேனா போகலாம் படுக்கலாம் என அசிங்கமாக பேசினார். அதன் பின்பு என்னை அவர் கொண்டுவந்த வண்டியில் ஏறுமாறு அழைத்தார் நான் ஏறவில்லை. பின்பு நான் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் வந்து சொன்னவுடன் அவர்கள் மறுநாள் உன் கணவரை விசாணைக்கு அழைக்கிறோம் நீ போன என்று சொன்னார்கள் அதனால் நான் என் தாயார் வீட்டிற்கு சென்றேன். பின்பு என் கணவர் என் தயார் வீட்டிற்கு வந்து உன்னை அரிவாளால் கொலை செய்துவிடுவேன் என கொலைமிரட்டல் விடுத்தார். பின்பு நான் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்திற்கு போன் செய்தேன். மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் எதிரியிடம் சாட்சியை தற்போது குறுக்குவிசாரணை செய்கிறீர்களா என இந்நீதிமன்றம் கேட்டதற்கு எதிரி தற்போது சாட்சியை விசாரிக்க என்னால் முடியாது. நான் வழக்கறிஞர் வைத்து சாட்சியை குறுக்குவிசாரணை செய்கிறேன் என கூறினார்.**

**குறுக்குவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.